# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1916/34 - 2015 මැයි මස 29 වැනි සිකුරාදා - 2015.05.29

*1916/34 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள்

***1972 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம்***

*22 (1) (ஊ) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1975 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, 1981 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, 1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, 1986 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, 1986 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு காணி அமைச்சர் எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்த்தன ஆகிய நான், இக்கட்டளை மூலம் :-*

(அ) இக்கட்டளைக்கான நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட கமத்தொழிற் காணிகள், இக்கட்டளைக்கான அட்டவணையின் நிரல் I இல் எவ்வாட்களின் பெயர்கள் குறித்துரைக்கப்பட்டுள்ளனவோ அவ்வாட்களுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டுமென்றும் ;

(ஆ) இக்கட்டளைக்கான அட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட கமத்தொழிற் காணிகள், இக்கட்டளைக்கான அட்டவணையில் எவ்வாட்களின் பெயர்கள் காணப்படுகின்றனவோ அவ்வாட்களினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டனவென்றும் அத்தகைய ஆட்கள் எந்தக் குடும்பத்தின் உறுப்பினர்களாக இருந்தனரோ அந்தக் குடும்பத்தலைவரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டதெனக் கருதப்பட்ட காணிப்பரப்பில் அத்தகைய கமத்தொழிற் காணிகள் உள்ளடக்கப்பட்டிருந்தனவென்றும் ;

(இ) இக்கட்டளைக்கான அட்டவணையின் நிரல் I இல் எவ்வாட்களின் பெயர்கள் காணப்படுகின்றனவோ அவ்வாட்கள், மேற்கூறப்பட்ட சட்டத்தின் நியதிகளின்படி கமத்தொழிற் காணியின் மீதான உச்சவரம்பு விதிக்கப்பட்ட நேரத்தில் பதினெட்டு வயதுக்குக் குறைந்தவர்களாக இருந்தனரென்றும் ;

(ஈ) இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட கமத்தொழிற் காணிகள் சொல்லப்பட்ட சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் எவரேனுமாளுக்குப் பராதீனப்படுத்தப்பட்டிருக்கவில்லையென்றும் ; அத்துடன்

(உ) சொல்லப்பட்ட சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய கமத்தொழிற் காணிகள் தொடர்பில் நட்டஈடு எதுவும் செலுத்தப்பட்டிருக்கவில்லையென்றும் ;

(ஊ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதிய 1568/15 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையை திருத்தம் செய்யப்படுகிறது என்றும்,

இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்த்தன,
காணி அமைச்சர்.

*காணி அமைச்சு,*
*பத்தரமுல்லை,*
*2015, ஏப்பிறல் 29.*

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*



2 - G 21600

### அட்டவணை

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| கொழும்பு 05, பொலிஸ் பார்க் வீதி, 06 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஷாலித்தகிஹான் மாரலந்த விஜேவர்த்தன. | வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில், கிர தலானகோறளையில் தேவமெதி ஹத்பத்துவில் பஹலமலகனே மற்றும் தேக்காவ கிராமத்தில் அமைந்துள்ளதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. சீ. எஸ். எம். அபேசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1982.10.30 ஆந் திகதிய 165/82 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1 எனக் குறித்துக்காட்டப்பட்டதும், ராய்கம் வத்த என அழைக்கப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு முழுவதும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :- வடக்கில் : 164/82 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 2 எச். எல். டி. எம். விஜேவர்த்தன என்பவரினால் உரிமைகோரப்பட்ட, 164/82 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1 மற்றும் கிராம சபை வீதி ; கிழக்கில் : எச். எல். டி. எம். விஜேவர்த்தன என்பவரினால் உரிமைகோரப்பட்ட, 164/82 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1, எவ். ஈ. அபேசுந்தர மற்றும் ஏனையோரினால் உரிமைகோரப்பட்ட ராய்கம் வத்த மற்றும் ஆரியரத்ன என்பவரினால் உரிமைகோரப்பட்ட காணி ; தெற்கில் : ஆரியரத்ன என்பவரினால் உரிமைகோரப்பட்ட காணியும் டபிள்யூ. பீ. பாலசூரிய மற்றும் ஏ. எம். பொடிஅப்புஹாமி என்போரினால் உரிமைகோரப்பட்ட காணியும் ; மேற்கில்: எச். எம். பொடிஅப்புஹாமி, எட்மன்ட் மற்றும் ஹன்டி என்போரினால் உரிமைகோரப்பட்ட வையும் மற்றும் 1681 ஆம் இலக்க இறுதிக் கிராம வரைபடத்தில் காணித்துண்டு 128 என்பதை அடுத்து உள்ளவையுமான காணிகள் ; பரப்பளவில் இது, அதன் மீதுள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து நாற்பத்தெட்டு ஏக்கர்கள், பூச்சியம் றூட்டுக்கள், முப்பத்திரெண்டு பேர்ச்சுக்களை (48 ஏக்கர்கள், 0 றூட்டுக்கள், 32 பேர்ச்சுக்கள்) கொண்டுள்ளது. |
| கொழும்பு 05, பொலிஸ் பார்க் வீதி, 06 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஹரித்தலக்ஷ்மன் டிலான் மாரலந்த விஜேவர்த்தன. | வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில், கிர தலானகோறளையில் தேவமெதி ஹத்பத்துவில் பஹலமலகனே மற்றும் தேக்காவ கிராமத்தில் அமைந்துள்ளதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. சீ. எஸ். எம். அபேசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1982.10.30 ஆந் திகதிய 164/82 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1 எனக் குறித்துக்காட்டப்பட்டதும், ராய்கம் வத்த என அழைக்கப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு முழுவதும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :- வடக்கில் : எஸ். எம். எம். விஜேவர்த்தன என்பவரினால் உரிமைகோரப்பட்ட, 163/82 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட இக்காணியின் பாகம் ; கிழக்கில் : கிராம சபை வீதி ; தெற்கில் : கிராம சபை வீதி ; மேற்கில் : குளியாப்பிட்டி - ஹெட்டிப்பொல பிரதான வீதி ; பரப்பளவில் இது, நாற்பத்தேழு ஏக்கர்கள், பூச்சியம் றூட்டுக்கள், இருபத்தொன்பது பேர்ச்சுக்களை (47 ஏக்கர்கள், 0 றூட்டுக்கள், 29 பேர்ச்சுக்கள்) கொண்டுள்ளது ; அத்துடன்<br><br>வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் கிர தலானகோறளையில் தேவமெதி ஹத்துபத்துவில் பஹலமலகனே மற்றும் தேக்காவ கிராமத்தில் அமைந்துள்ளதும், உரிமம்பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. சீ. எஸ். எம். அபேசேக்கர என்பவரினால் தயாரக்கப்பட்ட 1982. 10.30 ஆந் திகதிய 164/82 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இல. 2 எனக் குறித்துக்காட்டப்பட்டதும் ராய்கம். வத்த என அழைக்கப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு முழுவதும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :- வடக்கில் : கிராம சபை வீதி ; கிழக்கில்: 165/82 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், எஸ். ஜீ. எம். விஜேவர்த்தன என்பவரினால் உரிமைகோரப்பட்டதுமான காணி ; தெற்கில் : எஸ். ஜீ. எம். விஜேவர்த்தன என்பவரினால் உரிமைகோரப்பட்ட காணியின் பாகம் ; மேற்கில் : 1681 ஆம் இலக்க இறுதிக் கிராம வரைபடத்தில் காணித்துண்டு 128 எனக் குறித்துக்காட்டப்பட்டதும் எல். எம். எச். விஜேவர்த்தன என்பவரினால், உரிமைகோரப்பட்டதுமான காணியின் பாகம் ; பரப்பளவில் இது, ஒரு ஏக்கர், பூச்சியம் றூட்டுக்கள், மூன்று பேர்ச்சுக்களை (1 ஏக்கர், 0 றூட்டுக்கள், 3 பேர்ச்சுக்கள்) கொண்டுள்ளது. அதன் மீதுள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து மொத்தப் பரப்பளவாக நாற்பத்தெட்டு ஏக்கர்கள், பூச்சியம் றூட்டுக்கள், முப்பத்திரண்டு பேர்ச்சுக்களை (48 ஏக்கர்கள் 0, றூட்டுகள், 32 பேர்ச்சுக்கள்) கொண்டுள்ளது. |

**அட்டவணை** (தொடர்ச்சி)

*நிரல் I*

கொழும்பு 05, பொலிஸ் பார்க் வீதி, 06 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஷாலனிமாயாந்திமாரலந்த விஜேவர்த்தன.

*நிரல் II*

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில், கிரதலானகோறளையில் தேவமெதி ஹத்பத்துவில் பஹலமலகனே மற்றும் தேக்காவ கிராமத்தில் அமைந்துள்ளதும், உரிமம்பெற்ற நில அளவையாளர் டபிள்யு. சீ. எஸ். எம். அபேசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1982.10.30 ஆந் திகதிய 162/82 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1 எனக் குறித்துக்காட்டப்பட்டதும், ராய்கம் வத்த என அழைக்கப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு முழுவதும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :- வடக்கில் : ஓ. எம். பீ. பெரேரா என்பவரினால் உரிமைகோரப்பட்ட காணியும் ரண்ஹாமி என்பவரினால் உரிமைகோரப்பட்ட எட்டு ஏக்கர்களும் ; கிழக்கில் : ரண்ஹாமி என்பவரினால் உரிமைகோரப்பட்ட எட்டு ஏக்கர்களைக் கொண்ட காணியும், ரண்ஹாமி மற்றும் ஏனையோரினால் உரிமைகோரப்பட்ட காணியும் ; தெற்கில் : ரண்ஹாமி மற்றும் ஏனையோரினால் உரிமைகோரப்பட்ட காணியும், வண்டி வீதியும் மற்றும் ஆர். டி. மென்டிஸ், ஏ. டி. ஜினதாச மற்றும் ஆர். டி. சுவாரிஸ் என்போரினால் உரிமைகோரப்பட்ட காணிகளும் ; மேற்கில் : ஆர். டி. மென்டிஸ், ஏ. டி. ஜினதாச மற்றும் ஆர். டி. சுவாரிஸ் என்போரினால் உரிமைகோரப்பட்ட காணிகளும் மற்றும் ஓ. எம். பீ. பெரேரா என்பவரினால் உரிமைகோரப்பட்ட காணியும்; பரப்பளவில் இது, ஐந்து ஏக்கர்கள், மூன்று றூட்டுக்கள், பதினெட்டுப் பேர்ச்சுக்களை (5 ஏக்கர்கள், 3 றூட்டுக்கள், 18 பேர்ச்சுக்கள்) கொண்டுள்ளது ; அத்துடன்

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் கிரதலானகோறளையில் தேவமெதி ஹத்துபத்துவில் பஹலமலகனே மற்றும் தேக்காவ கிராமத்தில் அமைந்துள்ளதும், உரிமம்பெற்ற நில அளவையாளர் டபிள்யு. சீ. எஸ். எம். அபேசேக்கர என்பவரினால் தயாரக்கப்பட்ட 1982. 10.30 ஆந் திகதிய 163/82 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இல. 1 எனக் குறித்துக்காட்டப்பட்டதும் ராய்கம் வத்த என அழைக்கப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு முழுவதும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :- வடக்கில் : 163/82 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 2, 1681 ஆம் இலக்க இறுதிக் கிராம வரைபடத்தில் காணித்துண்டு 117 (ஏரி) முனிதாச மற்றும் ஆர். விஜேசேன என்போரினால் உரிமைகோரப்பட்ட காணி, ஜீ. ஏ. எல். பர்னாந்து மற்றும் ஏனையோரினால் உரிமைகோரப்பட்ட காணி மற்றும் டயஸ் வத்த ; கிழக்கில் : 1681 ஆம் இலக்க இறுதிக் கிராம வரைபடத்தில் காணித்துண்டு இல. 117, முனிதாச மற்றும் ஆர். விஜேசேன என்போரினால் உரிமைகோரப்பட்ட காணி, மற்றும் டயஸ் வத்த ; தெற்கில் : கிராம சபை வீதியும் மற்றும் 164/82 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், எச். எல். டி. எம். விஜேவர்த்தன என்பவரினால் உரிமைகோரப்பட்டதுமான இக்காணியின் பாகமும் ; மேற்கில் : குளியாப்பிட்டி ஹெட்டிப்பொல வீதி மற்றும் 163/82 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 2 ; பரப்பளவில் இது, முப்பத்தாறு ஏக்கர்கள், இரண்டு றூட்டுக்கள், இருபது பேர்ச்சுக்களை (36 ஏக்கர்கள், 2 றூட்டுக்கள், 20 பேர்ச்சுக்கள்) கொண்டுள்ளது ; அத்துடன்

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் கிரதலானகோறளையில் தேவமெதி ஹத்துபத்துவில் பஹலமலகனே மற்றும் தேக்காவ கிராமத்தில் அமைந்துள்ளதும், உரிமம்பெற்ற நில அளவையாளர் டபிள்யு. சீ. எஸ். எம். அபேசேக்கர என்பவரினால் தயாரக்கப்பட்ட 1982. 10.30 ஆந் திகதிய 162/82 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இல. 2 எனக் குறித்துக்காட்டப்பட்டதும் ராய்கம் வத்த என

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| கொழும்பு 05, பொலிஸ் பார்க் வீதி, 06 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஷாலனிமாயாந்திமாரலந்த விஜேவர்த்தன. | அழைக்கப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு முழுவதும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :- வடக்கில் : கிராம வாசிகளுக்கு வழங்கப்பட்ட அரச காணியும், ஆர். டி. மென்டிஸ் என்பவரினால் உரிமைகோரப்பட்ட காணியும் ; கிழக்கில் : ஆர். டி. மென்டிஸ் மற்றும் ரண்ஹாமி என்போரினால் உரிமைகோரப்பட்ட காணியும்,வண்டி வீதியும் மற்றும் 162/82 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 3 என்பதும் ; தெற்கில் : வண்டி வீதியும், 1684 ஆம் இலக்க இறுதிக் கிராம வரைபடத்தில் காணித்துண்டு இல. 7 மற்றும் இல. 19; மேற்கில் : 1684 ஆம் இலக்க இறுதித் கிராம வரைபடத்தில் காணித் துண்டு 9 பீ. என்பதும் மற்றும் ஆர். டி. டி. றோசலின் என்பவரினால் உரிமைகோரப்பட்ட காணியும் ; பரப்பளவில் இது, ஐந்து ஏக்கர்கள் இரண்டு றூட்டுக்கள், முப்பத்திநான்கு பேர்ச்சுக்களை (5 ஏக்கர்கள், 2 றூட்டுக்கள், 34 பேர்ச்சுக்கள்) கொண்டுள்ள, அதன் மீதுள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து மொத்தப் பரப்பளவாக நாற்பத்தெட்டு ஏக்கர்கள், பூச்சியம் றூட்டுக்கள், முப்பத்திரெண்டு பேர்ச்சுக்களை (48 ஏக்கர்கள், 0 றூட்டுக்கள் 32 பேர்ச்சுக்கள்) கொண்டுள்ளது. |

6- 401

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.